museum of modern
and contemporary art
sri lanka

**Quarterly Newsletter #7 – April 2024**

‘88 ஏக்கர்கள்: மினெட் டி சில்வாவின் வடபுமுவ வீட்டுத் திட்டம்’ கண்காட்சியானது 8,000ற்கும் மேற்பட்ட பார்வையாளர்களை வரவேற்றுள்ளது. இதில் நாடு முழுவதிலும் இருந்து பாடசாலைகள் மற்றும் மேற்படிப்பு கல்வி நிறுவனங்களிலிருந்து 699 மாணவர்கள் காண்காட்சியின் முதலாவது நாளான நவம்பர் 30, 2023லிருந்து வருகை தந்துள்ளனர்.

800ற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் 45ற்கும் மேற்பட்ட பொது நிகழ்ச்சிகளான கேலரி உரையாடல்கள், பயிற்சிப்பட்டறைகள், எடுத்தாளுநர் சுற்றுக்கள் மற்றும் கலைஞர்கள் சுற்றுலாக்கள் ஆகும். நீங்கள் அருகில் வசித்தால் MMCA இலங்கை, கிரேஸ்கேட் பூல்வார்ட், கொழும்பு 7ற்கு வருகை தரத் தவறாதீர்கள். எமது பொது நிகழ்ச்சிகளைப் பற்றி தெரிந்து கொள்ள செய்தி மடல், முகப்புத்தகம் (Facebook) மற்றும் இன்ஸ்டகிராமில் (Instagram) எம்மைத் தொடருங்கள்.

பெப்ரவரி மாதம் ‘88 ஏக்கர்கள்’ கண்காட்சியானது றின்மயீ பூத் அவர்களால் STIR Worldற்காக மதிப்பீடு செய்யப்பட அதே வேளையில், தலைமை எடுத்தாளுநர் ஷர்மினி பெரெய்ரா, Daily Newsஇல் பணிபுரியும் இஷாரா ஜெயவர்தனவினால் இலங்கையில் அருங்காட்சியகங்கள் எதிர்காலத்தைப் பற்றி உரையாடினார். மார்ச் மாதத்தில் கண்காட்சியானது Hindustan Timesஇன் நமீதா பந்தரே ‘Mind the Gap’ செய்தித்தாளில் இடம்பெற்றது. மேலும், எமது தலைமை எடுத்தாளுனர் The Morningஇன் ஷைலேந்தர் விக்கிரம ஆதித்யவுடன் சமகால கலைஞர்களை ஆய்வளார்களாக அங்கீகரிப்பதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

பெப்ரவரி 11ம் திகதி எமது முதலாவது ஆய்வுக்கட்டுரையான ‘இரண்டாவது தொகுப்பு: மினெட் டி சில்வாவின் வடபுமுவ வீட்டுத் திட்டம்’ வெளியிடப்பட்டது. சமகால கட்டடக் கலைஞர்களான இருஷி தென்னக்கோன், சுமேத கெலகம மற்றும் சுமுது அதுகோரள ஆகியோரது ‘is this an architectural documentary?’ (2023) எனும் படவரைவு ஆவணத்தின் மொழிபெயர்ப்பும் இதில் உள்ளடங்குகிறது. டி சில்வா அவர்களது ‘Experiments in Modern Regional Architecture in Ceylon 1950 to 1960’ (1965–1966) இப் புத்தகத்தில் விசேட சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளது. இந்த

ஆரம்ப கட்டுரையானது 1966 ம் ஆண்டில் கட்டடக் கலைஞர்களுக்கான சிலோன் நிறுவனத்தினால் முதன் முதலில் பிரசுரிக்கப்பட்டது. ‘இரண்டாவது தொகுப்பு’ உலக நினைவுச்சின்னங்கள் ஸ்தாபனம், பிரிட்டிஷ் கவுன்சில், கலை தெற்காசியா திட்டம் மற்றும், விட்றா டிசைன் ஸ்தாபனத்தின் உளமாரான நன்கொடையாலேயே சாத்தியமானது.

“மினெட் டி சில்வா சர்வதேச அங்கீகாரத்திற்கு தகுதியுள்ளவர். கட்டடங்களில் அவரது மரபு, மற்றும் கட்டடக்கலைக்கு அவரது அணுகுமுறை ஆகியன இன்றும் செல்வாக்கு செலுத்துகின்றன. இரண்டாவது தொகுப்பு’ வெளியீட்டில் MMCA இலங்கைக்கு ஆதரவளிப்பதில் உலக நினைவுச்சின்னங்கள் நிதியம் மகிழ்ச்சி அடைகிறது. மினெட்டைப் பற்றி இன்னும் பலர் கேள்விப்பட வேண்டும்; இந்த வெளியீடு அவரைக்குறித்த செய்தியைப் பரப்ப உதவும் – ஆகவே, அவரது தொடரும் மரபு வாழ்வதை உறுதிசெய்யும்.”

ஜோன் டார்லிங்டன், உலக நினைவுச்சின்னங்கள் நிதியத்தின் செயல்திட்டங்களுக்கான இயக்குனர்

“தற்போதைய ‘88 ஏக்கர்கள்’ கண்காட்சியுடன் இணைந்ததாக வெளியிடப்படும் MMCA இலங்கையின் முதல் ஆய்வு வெளியீடான ‘இரண்டாவது தொகுப்பு’க்கு ஆதரவளிப்பதில் நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இலங்கையின் கட்டடக்கலைஞர்களில் அடுத்த தலைமுறைகள், பொறுப்பான, கருத்துக்கள் விசாரிக்கப்பட்ட மற்றும் அனுதாபமான வடிவமைப்பின் பாரம்பரியத்தில் தொடர, இந்த வெளியீடு ஊக்குவிக்கும் என்று நாம் நம்புகிறோம். இலங்கையின் கட்டடக் கலைஞர்களில் ஒருவரின் தொடர்ந்து நீடிக்கும் மரபைக் கொண்டாடுமாறு, இந்த வெளியீடானது, கட்டடக் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், அறிஞர்கள் மற்றும் பொதுமக்களை அழைக்கிறது.”

ஒர்லாண்டோ எட்வட்ஸ், இலங்கை பிரிட்டிஷ் கவுன்சிலின் நாட்டு பணிப்பாளர்

“‘இரண்டாவது தொகுப்பு’யின் வெளியீட்டிற்கு நிதியுதவி வழங்கி பங்களித்ததையிட்டு தென் ஆசிய கலை திட்டம் பெருமிதம் கொள்கின்றது. MMCA இலங்கையே ASAPயின் முதல் இலங்கை மானிய பங்காளியாக இருப்பது மட்டுமல்லாமல், நாங்கள் ஆதரித்த முதல் அருங்காட்சியக வெளியீடும் இதுவாகும். எங்களைப் பொறுத்தவரையில், தெற்காசிய நவீன மற்றும் சமகால கலைத்

துறையில் பங்களிக்கும் முக்கிய காரணிகள் இலக்கியம் மற்றும் வெளியீடுகள் ஆகும். குறிப்பாக, இலங்கையின் கலை வரலாற்றுக் கதைக்கு மேலும் குரல் கொடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் ஷாமினி பெரெய்ராவின் தொலைநோக்கு கண்ணோட்டத்தின் கீழ், MMCA இலங்கையில் உள்ள அற்புதமான குழுவிடமிருந்து இந்த திட்டத்தைப் பெற்றுக் கொண்டதில் நாங்கள் அதிர்ஷ்டம் பெற்றுள்ளோம்.”

நூர் அஸ்லம், தென் ஆசிய கலை திட்டத்தின் (ASAP) நிறைவேற்று இயக்குனரான

பெங்களூரைச் சேர்ந்த நியா தண்டபாணியால் வடிவமைக்கப்பட்டு, ஷர்மினி பெரெய்ரா மற்றும் கௌமதி ஜெயவீரவால் பதிப்புரை செய்யப்பட்ட இப் புத்தகமானது அருங்காட்சியகத்தில் விற்பனைக்கு உள்ளது. மேலும் இன்ஸ்டாகிராம் மற்றும் முகப்புத்தகத்திலும் வாங்கலாம். தமிழ் மற்றும் சிங்கள மொழிபெயர்ப்புகளை எமது வலைத்தளத்தில் ஏப்ரல் 2024 முதல் இலவசமாக தரவிறக்கலாம்!

மார்ச் 21ம் திகதி, MMCA இலங்கையின் 2024ம் ஆண்டிற்கான ஸ்தாபக புரவலர், அருங்காட்சியகங்கள் குழுவிற்கான தலைவர் அஜித் குணவர்தனவின் சிறப்பு வரவேற்பில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் எமது ஸ்தாபக புரவலர் அருங்காட்சியகத்தின் முன்னெடுப்புகளில் துணை சேர்க்கும் முக்கியத்துவத்தை பாராட்டப்பட்டனர். ‘88 ஏக்கர்கள்’ கண்காட்சியை மற்றும் மினெட் டி சில்வாவை மையப்படுத்தி சிறப்பு சிற்றுண்டிகளை Bird & Bear Kitchenஇன் ஷவின் ருபேரு எமது ஸ்தாபக புரவலர் உண்டு மகிழ உருவாக்கினார்.

‘Arts 4 ADR’ எனும் புதிய திட்டத்தை MMCA இலங்கை மற்றும் SEDR (பயனுறுதிமிக்க வகையில் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஆதரவளித்தல்) குழுவுடன் இணைந்து வழங்குகின்றோம். ‘Arts 4 ADR’ என்பது, உரையாடலை வளர்ப்பதற்கும், சமூகங்களை ஒன்றிணைப்பதற்கும், பிரதிபலிப்பைத் தூண்டுவதற்கும், வகுப்புவாத மோதலின் சூழலில் நல்லிணக்கத்திற்கான மாற்று வழிகளை வழங்குவதற்கும் கலையின் திறனை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

MMCA இலங்கையானது உரையாடல் மற்றும் சிவில் ஊடாட்ட கூட்டுறவு திட்டத்தை பெருமையுடன் வழங்குகின்றோம். இக் கூட்டுறவு வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணத்தைச் சார்ந்த கலாசார பயிற்சியாளர்களை (ஓவியர்கள், சமூக

செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், வழிநடத்துபவர்கள், கலைஞர்கள் மற்றும் கல்வியாளர்கள்) குறிப்பாக உள்ளடக்க விழைகின்றது.

எமது சாந்தாதாரர்கள் அனைவருக்கும் இனிய தமிழ் சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்கள்!

புத்தாண்டு பிறக்கும்போது, உங்கள் அன்புக்குரியவர்களுக்கு வரையறுக்கப்பட்ட பதிப்பு சாரங்கள் மற்றும் கழுத்தில் அணியும் தாவணிகளைப் பரிசாக வழங்குங்கள்!

புத்தாண்டு பிறக்கும்போது, ஜோர்ஜ் கீட் (1901–1993) இன் இரண்டு ஓவியங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பதிப்பு சாரங்கள் மற்றும் கழுத்தில் அணியும் தாவணிகளே உங்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் மிகச் சிறந்த பரிசுகள்!

மேலும், நீங்கள் இவற்றைக் கொள்வனவு செய்வதன்மூலம், நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கை மற்றும் Selyn Foundation ஆகிய நிறுவனங்கள் பெண்களுக்கு கலாச்சார தொழில்முனைவு, தலைமைத்துவ மேம்பாடு மற்றும் நிதி முகாமைத்துவ திறன்களையும் வாய்ப்புகளையும் வழங்குவதற்கு உதவுகின்றீர்கள்.

Selyn மற்றும் MMCA இலங்கையால் தயாரிக்கப்பட்ட, கையால் வடிவமைக்கப்பட்டுள்ள தனித்துவமான இத்துணி வகைகளை அனைத்து கலை ஆர்வலர்களும் பெற்றுக்கொள்ள வேண்டும்!